**கவனிக்க.-** 2014.08.15 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1877 - 2014 අගෝස්තු මස 22 වැනි සිකුරාදා - 2014.08.22

1877 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1298 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1300 |


**கவனிக்க.-** மாநகர சபைகள் (திருத்தச்) சட்டமூலம் 2014, ஓகத்து 01 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2014, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஓகத்து மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஒய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம்

**சுப்றா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்து காட்டுநர்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்**

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் சுப்றா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்து காட்டுநர்) பதவிக்கு இணைத்துக்கொள்வதற்காக, தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் வகுதி 3 இன் முதலாம் தர சேவைத் தொகையின் முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) பதவியை வகிக்கும் தகைமைபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **இணைத்துக்கொள்ளப்படும் முறை.-** தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக இந்த திணைக்களத்தின் சுப்றா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்து காட்டுநர்) பதவிக்கு ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகளின் ஏற்பாடுகளுக்கமைய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கின்படி, நிலவுகின்ற வெற்றிட எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நியமிக்கப்படுவர்.

| | நேர்முகத் தேர்வின்போது புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | அதியுச்ச புள்ளித் தொகை |
|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமை | 25 |
| 2 | பதவிக்கு ஏற்புடையவாறு பெற்றுள்ள மேலதிக தொழில் தகைமை | 35 |
| 3 | பதவிக்கு ஏற்புடைய துறையில் பெற்றுள்ள மேலதிக அனுபவம் | 35 |
| 4 | நேர்முகத் தேர்வின்போது வெளிக் காட்டப்படும் திறமை | 05 |
| | மொத்தம் | 100 |

2. **விண்ணப்பிக்கும் முறை.-** இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய A4 தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து தமது நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தலுடன் 2014.09.22 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களம், த. பெ. இல. 557, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள சுப்றா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்து காட்டுநர்) பதவி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

3. **பதவிக்குரிய சம்பளம்.-** இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த இணைந்த சம்பள படி முறை ரூபா 20,030-11 x 365-18 x 500-ரூபா 33,045 ஆகும். எம்என்-7-2006 (A) பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இற்கு இணங்க சம்பளம் வழங்கப்படும்.

4. **வெற்றிட எண்ணிக்கை.-** தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் உள்ள 9 வெற்றிடங்களும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் உள்ள 29 வெற்றிடங்களும் இந்த கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய பூரணப்படுத்தப்படும்.

5. **தகைமைகள் :**

(i) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள முதலாம் தரத்தில் செய்து காட்டுநர் பதவியில் ஐந்து (5) வருட செயற்படு நிலையிலான திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்ப முடிவுத் திகதிக்குக் கிட்டிய முன்னரான ஐந்து (5) வருடங்களில் சகல சம்பள ஏற்றங்களையும் கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்கள வகுதி 3 சேவையின் தரம் I முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம்) செய்து காட்டுநர் பதவிக்கு கட்டாயம் உள்ளீர்க்கப் பட்டு இருத்தல் வேண்டும்.

(iv) *உடற் தகைமைகள்.-* பதவியின் கடமைகளை இலங்கையின் எப்பாகத்திலும் ஆற்றுவதற்கான உடல் மற்றும் உள தகைமைகளை சகல விண்ணப்பதாரிகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

(v) முதலாம் தரத்துக்குப் பொருத்தமான தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்குத் தேவையான சகல தகைமை களையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

6. **தேர்ந்தெடுக்கப்படும் முறை.-** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகளின் அடிப்படையிலும் சமனான திறமையின் வரிசைக்கேற்பவும் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள், வெற்றிடங்கள் நிலவுகின்ற தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் உள்ள தொழில்நுட்பவியல் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் சேவையாற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். இணைக்கப்படும் கல்லூரியில் நியமனத்தைப் பொறுப் பேற்பதை நிராகரித்தால் அவரது நியமனம் செல்லுபடி யற்றதாக்கப்பட்டு தகைமை அடிப்படையில் அடுத்து உள்ளவர்கள் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

7. **அரச சேவை நியமனங்கள்.-** நிர்வகிக்கப்படும் பொது விதிமுறைகளுக்கும் இப்பதவிக்குரிய ஆட்சேர்ப்புச் செய்யும் ஏற்பாடு களில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளுக்கும், அவற்றில் தற்போது செய்யப்பட்டுள்ள அல்லது எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும் அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படும்.

8. வெற்றிடங்களைப் பூர்த்திசெய்வதற்கும் அல்லது பூர்த்திசெய்யாமல் இருப்பதற்கும் இங்கு ஒழுங்குவிதிகள் ஏற்படுத்தப்படாதுள்ள விடயங்கள் தொடர்பாக தீர்மானிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

9. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
இளைஞர் அலுவல்கள் மற்றும்
திறன்கள் அபிவிருத்தி அமைச்சு.

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் சுப்ரா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்துகாட்டுநர்) பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளி வழங்கும் திட்டம்**

| | பரீட்சிக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | | அதியுச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | | 25 |
| | 1. ஒரு வருடத்துக்குக் குறையாத டிப்ளோமா பாடநெறிக்காக | 10 புள்ளிகள் | |
| | 2. சான்றிதழ் பாடநெறி (6 மாதங்களுக்குக் குறையாத) | 7 புள்ளிகள் | |
| | 3. சான்றிதழ் பாடநெறி (6 மாதங்களுக்குக் குறைந்த) ஒரு சான்றிதழுக்கு 2 புள்ளிகள் வீதம் | 7 புள்ளிகள் அதியுச்ச புள்ளிகள் 8 | |
| 2 | மேலதிக தொழில்சார் தகைமைகள் (ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகள் தவிர்ந்த) | | 35 |
| | 1. தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப்படும் உரிய துறைக்கான NVQ 7 ஆம் மட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்திருப்பின் | 20 புள்ளிகள் | |
| | 2. மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக் குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் வழங்கப் படும் உரிய துறைக்கான NVQ 6 ஆம் மட்ட தகைமை களைப் பூர்த்திசெய்திருப்பின் | 15 புள்ளிகள் | |
| 3. | மேலதிக அனுபவம் : | | 35 |
| | 1. செய்து காட்டுநர் பதவியின் 1 ஆம் தரத்தில் 5 வருடகால செயற்படு நிலையிலான திருப்திகரமான சேவைக் காலத்தைத் தாண்டிய ஒவ்வொரு வருடத்துக்கும் 5 புள்ளிகள் வீதம் | அதியுச்ச புள்ளிகள் 35 | |
| 4. | நேர்முகப் பரீட்சையின்போது வெளிக்காட்டப்படும் திறமை களுக்காக | | 5 |
| | மொத்தம் | | 100 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் சுப்ரா தர முகாமைத்துவ உதவியாளர் (செய்து காட்டுநர்) பதவி**

1. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
   1.2 முழுப்பெயர் (தமிழில்) :----.

2. 2.1 விலாசம் :----.
   2.2 தொலைபேசி இலக்கம் :----.
   2.3 சேவை நிலையம் :----.

3. 3.1 பிறந்த திகதி :
   வருடம் ---- மாதம் ---- திகதி ----

   3.2 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :
   வருடங்கள் ---- மாதங்கள் ---- நாட்கள் ----.

4. திருமணமானவரா/ திருமணமாகாதவரா/ விதவையா என்பன தொடர்பானது :----.

5. 5.1 செய்துகாட்டுநர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட தரம் மற்றும் திகதி :----.
   5.2 I ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வுபெற்ற திகதி :----.
   5.3 I ஆம் வகுப்பின் சேவைக்காலம் :----.
   5.4 செய்துகாட்டுநர் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிமூலம் :----.

6. 6.1 முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியல்) வகுதி 3 இன் தரம் I இற்கு சேவைக்கு உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ளீரா ? :----.
   6.2 அவ்வாறெனின் உள்ளீர்ப்புச் செய்யப்பட்ட திகதி :----.

7. 7.1 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் தினத்திற்கு முன்னரான 5 வருட சேவைக்காலத்தினுள் பெற்றுள்ள சம்பளமற்ற விடுமுறைகளின் எண்ணிக்கை :----.
   7.2 செய்துகாட்டுநர் தரம் I இல் செயற்படு நிலையிலான சேவைக்காலம் :----.

விண்ணப்பப்படிவம் எற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னரான 5 வருட காலத்தினுள் சகல சம்பள ஏற்றங்களையும் சம்பாதித்துக்கொண்டுள்ளேன் எனவும், அக்காலத்தினுள் எவ்வகையிலும் எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் உட்படவில்லை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பதவிக்குத் தேவையான தகைமைகள் என்னால் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்றும், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் போலியானது அல்லது பிழையானது எனத் தெரியவந்தால், நான் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டாலும்

நியமனம் பெறுவதற்குத் தகைமையற்று விடுவேன் என்பதையும் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணபத்தைச் சமர்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................... அவர்கள் ................................. ஆந் திகதியில் இருந்து இந்த அலுவலகத்தில் சேவை புரிகிறார் எனவும், ................ திகதிக்கு செயற்படு நிலையிலான சேவையை திருப்திகரமாக பூர்த்தி செய்துள்ளார் எனவும், இங்கு தரப்பட்டுள்ள சகல விடயங்களும் இந்த அலுவலகத் திலுள்ள கோவைகளுக்கு அமைய நான் தனிப்பட்ட வகையில் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும், அவை சரியானவை எனவும் .......................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
(உத்தியோகபூர்வ முத்திரை)
முகவரி :----.
திகதி :----.

8-718

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை மதுவரித் திணைக்களம்

மதுவரிப் பரிசோதகர் பதவிக்கு ஆட் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

இலங்கை மதுவரித்திணைக்களத்தின் மதுவரிப் பரிசோதகர் பதவி பொருட்டு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி.மீ × 210 மி.மீ(A 4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014.09.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித்திணைக்களம், இல.34, டப். ஏ.டி.ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மதுவரி பரிசோதகர் பதவி பொருட்டான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லா விதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் முறை.**- திறந்த போட்டிப்பரீட்சை மற்றும் தனிநபர் ஆற்றல்கள் மீது உரிய கவனம் செலுத்தும் நேர்முகப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும். தகைமை பெற்றிருப்பது நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமமாக அல்லது அதற்குக் குறைந்த அபேட்சகர் எண்ணிக்கை மாத்திரம் என உறுதிப்படுத்தப்படின், எழுத்துப் பரீட்சையை நடாத்தாமல் அவர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்ரசைக்கு அழைக்கப்படலாம்.

2. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.**- நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கேற்ப எழுத்துப்பரீட்சையில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் நேர்முகப்பரீட்சையின் பொருட்டு அழைக்கப்படுவார்கள். விண்ணப்ப தாரரர்கள், எழுத்துப் பரீசையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்குவதற்காக தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. **பதவியின் பொதுவான கடமை விபரம்.**- இயைபான கட்டளைச் சட்டங்கள் மற்றும் ஏனைய கட்டளைகளின் கீழ் சட்டரீதியாக மது நியமப்படுத்தல், சட்டவிரோத மது/ போதைப்பொருள் தடுப்பு செயன்முறை பொருட்டு கனிட்ட அலுவலர்களை வழிநடாத்தலும் மேற்பார்வையும் அத்துடன் குறித்த நடவடிக்கைகளில் தனிப்பட்ட ரீதியில் ஈடுபடுதல், அதாவது ஏதேனும் அதிகாரப் பிரதேசமொன்றில் அல்லது விசேட பிரிவொன்றில் அல்லது மதுவரி நிலையமொன்றில் உரிய பணிகளை நிறைவேற்றுதல், மது குற்றங்களை சுற்றிவளைத்தல் தடுத்தல் நடவடிக்கைகளை தாமாக செயற்படுத்தல் அத்துடன் குறித்த பணிகள் பொருட்டு கனிட்ட அலுவலர்களை வழிநடாத்துதல்.

4. **சம்பள அளவுத் திட்டம்.**- ரூபா 15,850 - 7×180-2×240-8×320-17×375-ரூபா 26,525 (11படிநிலை) மாதாந்த சம்பளம் இப்பதவிக்கு உரித்துடையதாகும். பொ.நி.சு.6/2006(iv)இன்படி RS-2-2006A)

5. **வயதெல்லை.**- விண்ணப்பதாரர்கள் 2014.09.22 ஆந் திகதியன்று 21 வயதுக்கு குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். தற்போது மதுவரித் திணைக்களத்தில் சேவை யாற்றும் அலுவலர்கள் ஏனைய தகைமைகளைக் கொண்டிருப்பின், உச்ச வயதெல்லை கருத்திலெடுக்காது வெளி அபேட்சகர்களாக விண்ணப் பிக்க முடியும்.

6. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

(i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

(ii) கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்கள் பொருட்டு க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(iii) பாதணிகள் இன்றி ஆகக் குறைந்த உயரம் 167.6 செ.மீ. (5அடி 6 அங்குலம்) இருத்தல் வேண்டும் என்பதுடன் மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 83.8 செ.மீ (33 அங்குலம்) இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணபதாரர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(v) நாட்டின் எப் பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடிவில்லை (கென்டாக் லென்சஸ்) அணியாது பொருள்களை இனங்காணும் பார்வை அடங்கலாக குறைந்த பட்சம் 6/6 மற்றும் 6/12 ஆன கண் பார்வை உடையவராக இருத்தல் வேண்டும்.

(vii) விளையாட்டுத் திறமை மற்றும் வெளி செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

7. எழுத்துப் போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள்.- பொது வினாத்தாள் (நேரம் : 2 மணித்தியாலங்கள் - 100 புள்ளிகள்)

விண்ணப்பதாரிகள் நுண்ணறிவு, தர்க்கிக்கும், தீர்மானமெடுக்கும் ஆற்றல் என்பனவற்றை அளந்து பார்த்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப் படுகின்றது. (கணித/சித்திர சிக்கல்கள், ஒத்த/எதிர்கருத்துள்ள சொல் எழுதுதல், சொற்றொடர்/வாக்கியம் அமைத்தல், வெற்றிடங்களை நிரப்புதல் போன்ற வினாக்களும் இதனுள் அடங்கும்.)

8. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் கீழே குறிப்பிட்ட தகைமைகள் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படும் :

விளையாட்டுத் திறமை.- வேறுபட்ட விளையாட்டுக்கள் தொடர்பாக தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச மற்றும் பாடசாலைப் போட்டிகளில் காட்டியுள்ள சாதனைகள் பொருட்டு.

விசேட பயிற்சி.- (பயிலிளவல்/சுயேச்சைச் சேவை/தற்பாதுகாப்பு கலைகள் அல்லது நுட்பப் பயிற்சி).

பிற வெளிச் செயற்பாடுகள்.

9. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரர்கள் 1,000 ரூபா பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பேரில் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையின் 0007041628 இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக்கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையிலிருந்து பெற்ற வங்கி ஆணையை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கி ஆணையின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம் வசம் வைத்துக்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்பட மாட்டாது.

10. **பயிற்சிக் காலம்**.- தெரிவுசெய்யப்படும் அபேட்சகருக்கு 3 மாத பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சிக் கால எல்லை முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடையாதவர்களின் பயிற்சி முடிவுறுத்தப்படும். குறித்த பரீட்சையில் சித்தியடையாமையானது இயைபான பயிலுநரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் காரணமாகவென உறுதிப்படுத்தப்படின் பயிற்சிக் காலம் மூன்று (03) மாதங்களினால் நீடிக்கப்பட்டு மீண்டும் பரீட்சையொன்றில் தோற்றுவதற்கு அவருக்கு இடமளிக்கப்படலாம். பயிற்சிக் காலத்தின் போது 3,000 ரூபா மாதாந்தத் திரட்டுக் கொடுப்பனவொன்று பயிற்சியாளருக்கு வழங்கப்படும்.

11. **தகுதிகாண் காலம்**.- வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொள்ளும் அபேட்சகர்கள் மூன்கு (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு மதுவரிப் பரிசோதகர்களாக நியமிக்கப்படுவார்கள். தகுதிகாண் காலம் முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப்படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்த பின் மதுவரி பரிசோதகர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள். பரீட்சையில் சித்தியடையாமையானது அலுவலரின் பாட எல்லையை விஞ்சியுள்ள விடயங்கள் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது என உறுதிப்படுத்தப் படின் அவரின் நடத்தை, வேலை மற்றும் வருகை எல்லா விதத்திலும் திருப்திப்படின் குறித்த பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு அவரது தகுதிகாண் காலம் ஆகக் கூடிய பட்சம் இரண்டு வருடங்கள் வரை மாத்திரம் நீடிக்கப்பட முடியும்.

12. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

(ii) நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக் கப்பட முடியும்.

13. **சேவை நிபந்தனைகள்** :

(i) அரசகரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுதப்படுகின்ற சகல ஒழுங்குசவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(iii) உடல் ரீதியான தகைமைகள் விண்ணப்பதாரர்களுக்கு உள்ளனவா என கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் பரிசீலனை செய்யப்படும்.

டி. ஜீ. எம். வீ. ஹபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்,
2014, ஓகத்து 6.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

மதுவரித் திணைக்களத்தின் மதுவரி பரிசோதகர் பதவி

1. (i) முழுப்பெயர் (தாய்மொழியில்): -----.
   (ii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): ----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (i) நிரந்தர முகவரி: ----.
   (ii) பிரதேசச் செயலாளர் பிரிவு: ----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iv) பொலிஸ் நிலையம் :----.
   (v) அருகிலுள்ள மதுவரி நிலையம் :----.
   (vi) அஞ்சல் முகவரி :----.
   (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
   (vii) தொலைபேசி இலக்கம் :----.

3. பிறந்த திகதி :----.

வருடம் : ---- மாதம் :---- திகதி :----.

2014.09.22 ஆந் திகதியன்று வயது:

வருடங்கள்: ---- மாதங்கள் :---- நாட்கள் :----.

4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா, பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.

5. தேசிய இனம் :----.

6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.

7. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.

8. கல்வித் தகைமைகள் :

(i)

| பட்டத்தின் பெயரும் வருடமும் | பல்கலைக் கழகம் | பாடங்கள் | சித்தியடைந்த வகுப்பு |
|---|---|---|---|
| | | | |

(ii) க. பொ. த. (சா. தரப்) பரீட்சையின் சித்திகள் :

| கணிதம் /ஆங்கிலம் பாடங்களுக்கான சித்தி | சுட்டிலக்கமும் வருடமும் |
|---|---|
| | |

9. தற்போது தொழில் புரிவதாயின், அதுபற்றி விபரங்கள் :----.

10. விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் வெளிச் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் :-----.

11. பிற விசேட பயிற்சி பற்றிய விபரங்பகள் /சுயேச்சை இராணுவ சேவை இருப்பின் அதன் விபரங்கள் :----.

12. (i) உயரம் :-
------- செ.மீ . (-------அடி------அங்குலம்)

(ii) மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்)
----- செ.மீ. ( ------அங்குலம்)

13. குற்றவியல் தவறொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும், பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் :------.

14. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
வங்கியாணையின் இல. :----.

வங்கியாணையை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்பிற்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8-763/1

---

## இலங்கை மதுவரித் திணைக்களம்

மதுவரி காவலாலர் /பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு ஆட் சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

இலங்கை மதுவரித்திணைக்களத்தின் மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவி பொருட்டு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கு இணங்க 297 மி.மீ × 210 மி.மீ(A 4) தாள்களில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2014.09.22 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "மதுவரி ஆணையாளர் நாயகம், இலங்கை மதுவரித்திணைக்களம், இல.34, டப். ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை வைத்தனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவி பொருட்டான விண்ணப்பப்படிவம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள், அறிவித்தலுக்கேற்ப எல்லா விதத்திலும் முழுமையாகவும் சரியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், அவ்வாறில்லாத அல்லது உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பப்படிவங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்தமை பற்றிய முறைப்பாடு கருத்திலெடுக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

**1. சேவைக்கு ஆட்சேர்க்கப்படும் முறை**.- அடிப்படைத் தகைமைகள் கொண்டவர்கள் போட்டிப் பரீட்சையொன்றுக்கும் அதில் சித்தியடைபவர்கள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கும் உட்படுத்தப்பட்டு புள்ளிகள் வழங்கப்பட்டதன் பிற்பாடு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**2. பதவியின் பொதுவான கடமை விபரம்**.- குறித்தொதுக்கப் படுகின்ற அதிகாரப் பிரதேசத்தில் வெளிக்கள கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் மது குற்றங்களுக்கு ஏற்புடைய தகவல்களை கண்டுபிடித்து அறிக்கையிடல், அத்தகைய சுற்றிவளைப்பு களுக்கு உதவுதல் மற்றும் உரிய நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல், இதற்கு மேலதிகமாக, ஒதுக்குக் கடமை அடங்கலாக மது குற்றங்கள்/ தொழில்நுட்ப அறிக்கைகள், பதிவேடுகளை நாளதுவரைப்படுத்தி

பேணுதல் என்பனவும் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள விசேட கடமைகளாகும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- ரூ.14,280 7×145-10×180-17×240- ரூபா 21,175 மாதாந்த சம்பளம் இப்பதவிக்கு உரித்துடையதாகும். அ. நி. சு. 6/2006(iv)இன்படிRS-I-2006A)

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் 2014.09.22 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள்** :

(i) தமிழ்/சிங்களம் மொழி மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆங்கில மொழியும் அடங்கலாக ஆறு (6) பாடங்களில் ஒரே அமர்வில் க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) ஆண் மதுவரி காவலாளர் பொருட்டு பாதணிகள் இன்றி ஆகக் குறைந்த உயரம் 162.5 செ.மீ(5அடி 4 அங்குலம்) இருத்தல் வேண்டும் என்பதுடன் மார்பின் அளவு மூச்சு உள்வாங்காமல் 81.2 செ.மீ (32 அங்குலம்) இருத்தல் வேண்டும். பெண் மதுவரி காவலாளர் பொருட்டு உயரம் 157.5 செ.மீ(5அடி 2 அங்குலம்) இருத்தல் வேண்டும்.

(iii) மூக்குக் கண்ணாடி அல்லது தொடுகைக் கண்ணாடிவில்லை (கென்டாக் லென்சஸ்) அணியாது பொருட்களை இனங் காணும் பார்வை குறைந்தபட்சம் 6/6 மற்றும் 6/12 ஆன கண் பார்வை உடையவராக இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாக இருத்தல் வேண்டும். பெண் விண்ணப்பதாரர்கள் திருமண மாகாதவர்களாக இருத்தல் வேண்டும். ஆட்சேர்க்கப்படும் பெண் காவலாளர் தகுதி காண் காலத்தை பூர்த்தி செய்து பதவியில் உறுதிப்படுதப்படும் வரையில் திருமணம் முடிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(v) நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய நல்ல தேகாரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(vi) விளையாட்டுத் திறமை மற்றும் வெளி செயற்பாடுகள்பால் முன்னுரிமை அளிக்கப்படும்.

6. எழுத்துப் போட்டிப் பரீட்சை பற்றிய விபரங்கள் :

பொது உளச்சார்பு - 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

பொது அறிவு - 1 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

7. கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் கீழே குறிப்பிட்ட தகைமைகள் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படும் :

1. கிரிக்கற் / கால் பந்து/ கரப்பந்து/ மெய்வல்லுநர் விளை யாட்டுக்கள்
2. சாரணர்/பயிலிளவல்/இராணுவ /சுயேச்சை/பொலிஸ் உப சேவை
3. தற்பாதுகாப்புக் கலைகள்
4. தலைமைத்துவம்
5. வெளிச் செயற்பாடுகள்/ஆளுமை

8. **பரீட்சைக் கட்டணம்**.- விண்ணப்பதாரர்கள் 500 ரூபா பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். குறித்த தொகையை மதுவரி ஆணையாளர் நாயகத்தின் பேரில் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையின் 0007041628 ஆம் இலக்கம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கக்கூடியதாக ஏதேனும் வங்கிக் கிளையிலிருந்து பெற்ற வங்கி ஆணையை விண்ணபத்துடன் அனுப்புதல் வேண்டும். வங்கி ஆணையின் நிழற்படப் பிரதியொன்றை விண்ணப்பதாரர் தம் வசம் வைத்துக்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்படுகிறது. இத்தொகை மீள செலுத்தப்பட மாட்டாது.

9. **பயிற்சிக் காலம்**.- தெரிவுசெய்யப்படும் அபேட்சகர் ஒவ்வொருவ ரும், முதலில் பயிலுநர் மது வரி காவலாளர்/பெண் மதுவரி காவலாள ராக நியமிக்கப்படுவதுடன், மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு நியமிக்கப்படும் பொருட்டு குறைந்தபட்சம் 6 மாதகால பயிற்சியைப் பெற்று அதன் பின்னர் குறித்துரைத்த பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டும்.

10. **தகுதிகாண் காலம்**.- வெற்றிகரமாக பயிற்சியை முடித்துக் கொள்ளும் அபேட்சகர்கள் மூன்கு (3) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு மதுவரிப் காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். தகுதிகாண் காலம் முடிவில் அவர்களால் சித்தியடைய வேண்டும் என விதித்துரைக்கப்படுகின்ற திணைக்களப் பரீட்சைகளில் சித்தியடைந்த பின் இயைபான பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்கள்.

11. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்.-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.
(ii) நாட்டின் எப் பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட முடியும்.

12. **சேவை நிபந்தனைகள்** :

(i) அரசகரும மொழிகள் சட்டம் அத்துடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் அமுல்படுதப்படுகின்ற சகல ஒழுங்குசவிதிகள், சட்டங்கள் என்பனவற்றுக்கிணங்க செயல்படுவதற்கு கட்டுப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10-12 வரையிலான பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

(iii) உடல் ரீதியான தகைமைகள் விண்ணபதாரர்களுக்கு உள்ளனவா என கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்கு முன்னர் பரிசீலனை செய்யப்படும்.

டி. ஜீ. எம். வீ. ஹபுஆரச்சி,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

இலங்கை மதுவரித் திணைக்களம்,
2014, ஓகத்து 6.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மதுவரித் திணைக்களத்தின் மதுவரி காவலாளர்/பெண் மதுவரி காவலாளர் பதவி**

1. (i) முழுப்பெயர் (தாய்மொழியில்): -----.
   (ii) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்): ----.
   (iii) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. (i) நிரந்தர முகவரி: ----.
   (ii) பிரதேசச் செயலாளர் பிரிவு: ----.
   (iii) கிராம அலுவலர் பிரிவு :----.
   (iv) பொலிஸ் நிலையம் :----.
   (v) அருகிலுள்ள மதுவரி நிலையம் :----.
   (vi) அஞ்சல் முகவரி :----.
   (பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதற்காக)
   (vii) தொலைபேசி இலக்கம் :----.
3. பிறந்த திகதி :----.

   வருடம் : ---- மாதம் :---- திகதி :----.

   2014.09.22 ஆந் திகதியன்று வயது:

   வருடங்கள்: ---- மாதங்கள் :---- நாட்கள் :----.
4. இலங்கைப் பிரசையா என்பது பற்றி (பரம்பரையாகவா அல்லது பதிவின் மூலமா என்பது பற்றி குறிப்பிடவும்) :----.
5. தேசிய இனம் :----.
6. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.
7. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது பற்றி :----.
8. கல்வித் தகைமைகள் :

   (i) க.பொ.த.(சா.தரப் பரீட்சையின் சித்திகள் :

   வருடம் :------- சுட்டிலக்கம் :-----.

| சித்தியடைந்த பாடங்கள் | தரம் |
|---|---|
| | |

9. பாடசாலையிலிருந்து விலகிய பின் செய்த தொழில் /பின்பற்றிய பயிற்சி நெறிகள்:

| தொழில் அல்லது பயிற்சி நெறியின் பெயர் | காலம் இருந்து-வரை | நிறுவனம் | தொழில் எனின் விலகிய மைக்கான காரணம் |
|---|---|---|---|
| | | | |

10. விளையாட்டுச் சான்றிதழ்கள் மற்றும் வெளிச் செயற்பாடுகள் பற்றிய விபரங்கள் :-----.
11. பிற விசேட பயிற்சி பற்றிய விபரங்கள் /சுயேச்சை/இராணுவ சேவை இருப்பின் அதன் விபரங்கள் :----.
12. (i) உயரம் :-
    செ.மீ (-------அடி----அங்குலம்)

    (ii) மார்பின் அளவு (மூச்சு உள்வாங்காமல்)
    -----செ.மீ ( ----அங்குலம்)
13. குற்றவியல் தவறொன்றுக்கு எப்போதாவது நீதிமன்றமொன்றில் குற்றவாளியாக்கப்பட்டிருப்பின், அந்த தவறும், பெற்ற தண்டனையும் பற்றிய விபரங்கள் :------.
14. பணம் செலுத்திய வங்கியின் பெயர் :----.
    வங்கியாணையின் இல. :----.

| வங்கியாணையை கழராதவாறு இங்கு ஒட்டவும். |
|---|

15. இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயம் பொய்யானது அல்லது தவறானது என தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப்படின், இந்த பதவி பொருட்டு நான் தகைமை இழப்பிற்கு ஆளாவேன் எனவும், அத்தகைய விடயங்கள் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் நட்டஈடு இன்றி சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

8-763/2

## ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், தெற்கத்திய வளாகம் - சூரியவெவ

பட்டதாரி மாணவ பயிலிளவல்நிலை (Cadetships) உத்தியோகத்தர்

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ, தெற்கத்திய வளாகத்தில், பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்காக பொருத்தமான தகைமையுடைய இலங்கையரிடமிருந்து விண்ணப்பங்கள் 2014, யூலை 27 ஆந் திகதி முதல் 2014, ஓகத்து 31 ஆந் திகதிவரை கோரப்படுகின்றன.

2. பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகள் ஆகியவற்றை வெற்றிகரமாக முடித்தவர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்பு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றினால் பட்டங்கள் வழங்குவதற்கு ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

3. இப்பட்டதாரி மாணவ பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிகளுக்கு பிரயோகிக்கத்தக்க பட்ட நிழ்ச்சித்திட்டங்களில் கட்டடக்கலை இளமாணி (B Arch) ஐந்து ஆண்டுகள், கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) நான்கு ஆண்டுகள், கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி மூன்று ஆண்டுகள், அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) நான்கு ஆண்டுகள், கனிய அளவையியலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) நான்கு ஆண்டுகள், தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி நான்கு ஆண்டுகள் மற்றும் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணி நான்கு ஆண்டுகள் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

3.1 தெரிவுக்காக நடாத்தப்படும் மூன்று நேரடி பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளினதும் மற்றும் ஒவ்வொரு படைப் பிரிவுகளிலும் தேவைப்படும் வெற்றிடங்களினதும் மீது மூன்று படைகளுக்கான பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களின் ஒதுக்கீடு அடிப்படையைக் கொண்டிருக்கும். பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக முடித்துக் கொண்ட பின்னர் இலங்கை தரைப்படை, கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளில் பயிலுனர்கள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

3.2 பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலான கற்கைகளின் கல்விசார் மற்றும் இராணுவ கூறுகளை வெற்றிகரமாக முடிக்கின்ற பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் களுக்கு பிரயோகிக்கத்தக்கவாறு கட்டடக்கலை இளமாணி (B Arch) கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி (B.Sc.) (கௌரவ), கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி, அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (கௌரவ), அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி, கனிய அளவையியலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ), கனிய அளவையியலில் விஞ்ஞான இளமாணி, தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி மற்றும் தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணி பட்டம் வழங்கப்படும்.

3.3 சகல பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும் ஆங்கில மொழியில் நடாத்தப்படும்.

3.4 தெரிவுசெய்யப்படும் தேருனர்கள் அவர்களின் தகைமைகளுக்கேற்ப பின்வரும் இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டங்களில் ஒன்றைப் பயிலுதல் வேண்டும் :-

(அ) கட்டடக்கலை இளமாணி (B Arch) : ஐந்து வருடங்கள் கொண்ட பட்டம் என்பதுடன், பின்வரும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் முறையே 3 ஆம், 4 ஆம் வருடங்களில் வெளியேறவும் முடியும்.

கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ) : நான்கு (4) ஆண்டுகள்.

கட்டியெழுப்பப்பட்ட சுற்றாடலில் விஞ்ஞான இளமாணி : மூன்று (3) ஆண்டுகள்.

2013 அல்லது 2012 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாட நிரலில் குறைந்தபட்சம் மூன்று (3) பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை (YES) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆகும்.

(i) குறைந்தபட்சம் பின்வரும் பாடங்களில் ஒரு பாடத்தில் அதற்கு மேல் :

உயிரியல்
உயர் கணிதம்
இரசாயனவியல்
பௌதிகவியல்
இணைந்த கணிதம்
சித்திரக்கலை
புவியியல்

அத்துடன்

(ii) பின்வரும் அட்டவணையில் ஒரு பாடத்தில் அல்லது இரண்டு பாடங்களில் :

| | |
|---|---|
| கணக்கியல் | சீன மொழி |
| இந்து நாகரிகம் | மனைப்பொருளியல் |
| வணிகப் புள்ளி விபரவியல் | அளவையியலும் விஞ்ஞான முறையும் |
| இஸ்லாம், இஸ்லாமிய நாகரிகம் | கணிதம் |
| கிரேக்க உரோம நாகரிகம் | சமஸ்கிருதம் |
| அரசியல் விஞ்ஞான மூலகங்கள் | ஜேர்மன் |
| ஆங்கிலம் | அரபு |
| சிங்களம் | வரலாறு |
| கிறிஸ்தவ நாகரிகம் | வியாபாரக் கற்கைகள் |
| தொடர்பாடல் ஊடகக் கற்கை | யப்பானிய மொழி |
| ஹிந்தி | பொருளியல் |
| பௌத்த நாகரிகம் | பாளி |
| பிரெஞ்சு | தமிழ் |
| தகவல் தொழில் நுட்பம் | |

(iii) குறைந்தபட்சம் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் திறமைச் சித்தி (சி) பெற்றிருத்தல் வேண்டும். அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சையில் கணிதப் பாடத்தில் சாதாரண (எஸ்) சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **கனிய அளவையியலில் விஞ்ஞான இளமாணி (கௌரவ)** - நான்கு (4) ஆண்டுகள்

2013 அல்லது 2012 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பின்வரும் பாட அட்டவணையில் குறைந்தபட்சம் மூன்று (3) பாடங்களில் சாதாரண (எஸ்) சித்தியுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை (YES) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆகும்.

பின்வரும் பாடங்களில் ஆகக்குறைந்தது ஏதாவது ஒரு பாடத்திலும் :

இணைந்த கணிதம் உயர் கணிதம்

அத்துடன்

கீழே குறிப்பிடப்படும் அட்டவணையிலிருந்து ஏனைய பாடத்திற்கு/பாடங்களுக்குத் தோற்றி சித்திபெற்றிருத்தல் வேண்டும் :

| | | |
|---|---|---|
| கணக்கியல் | பொருளியல் | வணிகப் புள்ளி விபரவியல் |
| வியாபாரக் கற்கைகள் | பௌதிகவியல் | இரசாயனவியல் |
| தகவல் தொழில் நுட்பம் | | |

இதற்கு மேலதிகமாக அபேட்சகர்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கீழே குறிப்பிடப்படும் தேவைப் பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(அ) கணிதம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தி (சி) சித்தியொன்று

(ஆ) விஞ்ஞானம் I அல்லது II பாடத்தில் குறைந்தபட்சம் சாதாரண சித்தி (எஸ்) சித்தியொன்று

(இ) ஆங்கிலப் பாடத்தில் குறைந்தபட்சம் திறமைச் சித்தி (சீ) சித்தியொன்று

(ஆ) அளவையியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி - நான்கு (4) ஆண்டுகள்

2013 அல்லது 2012 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிகவியல், இணைந்த கணிதம் மற்றும் ஏதாவது வேறு பாடத்துடன் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்த, பல்கலைக்கழக அனுமதி (YES) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியான வர்கள் ஆகும்.

(இ) தகவல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி - நான்கு (4) ஆண்டுகள்

2013 அல்லது 2012 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கலை அல்லது வர்த்தகப் பிரிவில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்த, பல்கலைக்கழக அனுமதி (YES) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆகும்.

தகவல் முறைமைகளில் விஞ்ஞான இளமாணி - நான்கு (4) ஆண்டுகள்

2013 அல்லது 2012 ஆம் ஆண்டு க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், கலை அல்லது வர்த்தகப் பிரிவில் மூன்று (3) பாடங்களில் சித்தியடைந்த, பல்கலைக்கழக அனுமதி (YES) உடையவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் ஆகும்.

3.5 தெரிவுசெய்யப்பட்ட தேருனர்கள் ஆங்கிலம், முகாமைத்துவம், சட்டம், சர்வதேச கற்கைகள் மற்றும் இராணுவ கற்கைகள் உட்பட சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பலதரப்பட்டதும் பொதுவானதும் விசேடமானதுமான பாடங்களைப் பின்பற்றுமாறு வேண்டப்படுவர்.

3.6 தமது பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின்போது, பௌதீக அபிவிருத்தி, தேகாப்பியாசம், ஆயுதப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் ஆகியவற்றில் தொடர்ச்சியான பயிற்சியை மேற்கொள்ளுவதற்கும் அவர்கள் வேண்டப்படுவர்.

**4. தகுதிக்கான தேவைகள்**.- தேருநர்கள் :-

(அ) இலங்கைப் பிரசையொருவராக இருக்க வேண்டும் ;

(ஆ) 2014, ஒகத்து 31 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 22 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியைக் கொண்டிருப்பதுடன் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

(i) சாதாரண பொதுப் பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி பாடத்திற்கு குறைந்தபட்சம் திறமைச் சித்தியை (சி) கொண்டிருத்தல் வேண்டும்.

(ஈ) குறைந்தபட்சம் பின்வரும் பௌதீக நியமங்களைத் திருப்திப் படுத்துதல் வேண்டும் :

| | | ஆண் | பெண் |
|---|---|---|---|
| உயரம் | தரைப்படை | 5'6" | 5'3" |
| | கடற்படை | 5'6" | 5'3" |
| | விமானப்படை | 5'6" | 5'4" |
| நிறை | தரைப்படை | 50 கி. கி. | - |
| | கடற்படை | 50 கி. கி. | 41 கி. கி. |
| | விமானப்படை | 17 <BMI< 26 | 17 <BMI< 25 |
| மார்பளவு | | 32" (விரியாத) | - |

**குறிப்பு**.- விளையாட்டுத் துறையில் அல்லது அத்தகைய வேறு செயற்பாடுகளில் முதன்மையான சாதனைகளைத் தேருனர் கொண்டிருந்தால், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினாலும் மேற்படி பௌதீக நியமங்கள் தளர்த்தப்பட முடியும்.

(உ) **அவசியப்படும் மருத்துவ நியமங்களுக்கு இணங்குதல்**.- பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரினதும் மற்றும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகச் சபையின் தலைவரினதும் திருப்திக்கு ஏற்ப மருத்துவ சோதனையொன்றில் சித்தியடையுமாறு வெற்றிகரமான தேருநர்கள் வேண்டப்படுவர்.

(ஊ) **திருமணமாகாதவர்**.- பயிற்சியின்கீழ் உள்ள வேளைகளில் திருமணம் செய்வதற்கும் அத்துடன் படை ஒழுங்குவிதிகளின்கீழ் அவ்வாறு செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும் வரையும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் திருமணம் செய்வதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

5. **சேவை நிபந்தனைகள்**.- ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாக பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்கள் 1981 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புக் கல்வி நிறுவனச் சட்டம் மற்றும் அதில் மேலும் பின்தொடரப்பட்ட திருத்தங்கள் ஆகியவற்றின்கீழ் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு உட்படுவார்கள்.

6. தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் சேர்த்துக்கொள்ளும் நேரத்தில் சம்பந்தப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் பட்டத்தைப் பெற்ற பின்னர் அவர்கள் பதவிக்கு அமர்த்தப்பட்ட படையில் இணைப்புச் செய்யப்பட்ட பின்னர், பிரயோகிக்கத்தக்கவாறு கட்டாயமான காலமொன்றுக்கு சேவையாற்றுவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணையொன்றையும் உடன்படிக்கையொன்றையும் செய்துகொள்ளல் வேண்டும்.

7. மாதமொன்றுக்கு அண்ணளவாக 26,000 ரூபா கொண்ட சம்பளமும், படியும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும். இதற்கு மேலதிகமாக, கட்டணமின்றி பின்வரும் வசதிகள் கிடைக்கச் செய்யப்படும் :-

(i) உணவு மற்றும் தங்குமிடம் ;
(ii) மருத்துவ வசதிகள் ;
(iii) சீருடைகள் ;
(iv) அதிகாரியின் வேலையாள் வசதிகள் ;
(v) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்.

8. இலங்கைத் தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் கிரமமான படைகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டதன் மீது, சேவைக் கொடுப்பனவு சட்டக்கோவையின் பிரகாரம் வரிசைப் பதவிக்கு பிரயோகிக்கத்தக்க சம்பளமும் படியும் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும்.

(அ) பின்வரும் படிகள் மாதாந்தம் கொடுப்பனவு செய்யப்படும் :-
(i) தகுதிப்படி ;
(ii) பங்கீட்டுப்படி ;
(iii) 'உள்ளே வாழுமாறு'' கட்டளையிடப்பட்டவர்களுக்கான படி (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்) ;
(iv) சீருடை பராமரிப்புப் படி.

(ஆ) பின்வரும் வசதிகள் வழங்கப்படும்/படிகள் கொடுப்பனவு செய்யப்படும் :
(i) ''உள்ளே வாழுமாறு'' கட்டளையிடும்போது இலவச தங்கும் இடவசதி ;
(ii) வாடகை வீட்டில் வசிப்பதாயின் வரையறுக்கப்பட்ட வாடகைப்படி ;
(iii) சீருடைப்படி ;
(iv) திருமணமான அலுவலருக்கு அதிகாரியின் வேலையாள் படி/திருமணமாகாத அலுவலருக்கு அதிகாரியின் வேலையாள் சேவைகள் ;
(v) ''உள்ளே வாழுமாறு'' கட்டளையிடப்பட்டவர்களுக்கு பணியாற்றும் இடத்திலிருந்து வீடு இருக்கும் நிலையம் வரை ஒரு மாதத்துக்கு ஒரு மீளத்திரும்பும் கடமை ஆணைச்சீட்டு.

9. அவர்களது சம்பள எதிர்நோக்கல்கள் மற்றும் சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகளினால் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் உத்தியோகத்தர்கள் ஆட்சிப் படுத்தப்படுவார்கள் :-

(i) தரைப்படை/கடற்படை/விமானப்படையின் வேதன சட்டக் கோவை
(ii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப்படை உத்தியோகத்தர்களுக்கான நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள்
(iii) இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தரைப்படை/கடற்படை/விமானப்படை நடைமுறையிலான ஓய்வூதியங்கள் மற்றும் பணிக்கொடைகள் சட்டக்கோவை

10. பயிற்சியின்போது ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாக உப வேந்தரினாலும் அத்துடன்/ அல்லது சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளாலும் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பயிற்சியை மேற்கொள்வதற்கு பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் வேண்டப் படுத்தப்படுவர்.

11. பயிற்சி பெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் இலங்கையின் அல்லது வெளிநாட்டின் ஏதாவது ஒரு பகுதிக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுவதற்கு ஆட்படுவார்கள்.

12. பயிற்சி பெறும் பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர்கள் உள்ளே வாழுமாறு வழங்கப்பட்ட இடவசதியில் வாழுமாறும், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் சூரியவெவ தெற்கத்திய வளாகத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட படைத் தாபனங்களினால் முன்வைக்கப்பட்ட வழக்கமான வேலை முறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

13. **மொழித் தேவைப்பாடுகள்**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்காக ஏற்கனவே செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது சட்ட ஒழுங்குவிதிகளுடன் இணங்குமாறு தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

14. **ஆளடையாளத்தை நிரூபித்தல்.**- விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கான சான்றினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுவார்கள். இந்நோக்கத்திற்காக ஆட்களை பதிவுசெய்யும் திணைக்களத்தினால் அல்லது தபால் மா அதிபரினால் வழங்கப் பட்டுள்ள அடையாள அட்டைகளும் மோட்டார் வாகனங்கள் பதிவாள ரினால் வழங்கப்பட்டுள்ள மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

15. விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தின் www.kdu.ac.lk என்ற இணையத்தளத்தில் இருந்து விண்ணப்பப்படிவத்தையும் சிறு விபர பிரசுரத்தையும் பதிவிறக்கம் செய்ய முடியும்.

16. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும்போது, "உப வேந்தர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்" சார்பில் இலங்கை வங்கி, மொறட்டுவை, இடம கிளையின் நடைமுறைக் கணக்கு இலக்கம் 9405831 இற்கு வரவுவைக்கப்படுவதற்காக இலங்கை வங்கியின் ஏதாவது ஒரு கிளைக்கு 1,000 ரூபா (ஆயிரம் ரூபா) தொகையினை கொடுப்பனவு செய்வதன் மூலம் தாங்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அடிப்படைத் தகைமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் சரிவர நிரப்பப்படாத அல்லது இத்தகவலின் நிபந்தனைகளின் பிரகாரம் இல்லாததுமான விண்ணப்பங்கள் அறிவித்தலேதுமின்றி நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பக் கட்டணங்கள் மீளளிப்புச் செய்யப்படவும் மாட்டாது.

17. சரியாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2014, ஓகத்து 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் "பதிவாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், இரத்மலானை" எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் மேல் இடது மூலையின் மீது "பயிலிளவல் (Cadet) உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்" மற்றும் விண்ணப்பித்துள்ள கற்கைப் பிரிவு என்பவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்களும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்காத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

18. அரசாங்க அல்லது கூட்டுத்தாபனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள் தங்களது விண்ணப்பங்களை திணைக்கள/கூட்டுத்தாபன தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படின் குறிப்பிட்ட பதவியிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரிடமிருந்து உறுதிக் கடிதம் ஒன்றையும் வழங்குதல் வேண்டும்.

19. பிறப்புப் பதிவுச் சான்றிதழ், க. பொ. த. (சா. த.) மற்றும் க. பொ. த. (உ. த.) பெறுபேற்றுத் தாள்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதி (YES) தகுதிக்கான பெறுபேற்றுத் தாள் ஆகிய ஆவணங்களின் பிரதிகளை மாத்திரம் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பிவைத்தல் வேண்டும்.

20. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு வினால் நிர்ணயிக்கப்பட்டவாறு மதிப்பாய்வு மூலப்பிரமாணத்தின் பிரகாரம் அவசியப்பட்ட தரங்களைக் கொண்டுள்ள தேருநர்கள் மத்தியிலிருந்து பூர்வாங்க தெரிவுகள் இடம்பெறும். முதலாவது நேர்முகத் தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட தேருநர்கள் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறான சோதனைகளில் பங்கு பற்றுமாறு வேண்டப்படுவார்கள். ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ சபையின் மூலம் நியமிக்கப்பட்ட இறுதித் தேர்வுக்குழுவினால் இறுதித் தேர்வு மேற்கொள்ளப்படும்.

21. நேர்முகப் பரீட்சைகளுக்கும் சோதனைகளுக்கும் தெரிவுசெய்யப் படும் தேருநர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடங்கள், நேரங்கள் மற்றும் திகதிகள் ஆகியன எழுத்தில் அறிவிக்கப்படும். இந்நோக்கத்திற்கு விண்ணப்பதாரிகளுக்கு பிரயாண அல்லது வேறு செலவினங்கள் கொடுப்பனவு செய்யப்படமாட்டாது.

22. விண்ணப்பதாரி ஒருவரை சிபாரிசு செய்வதற்கு யாரேனும் ஒருவர் விரும்பினால், அவருக்கு நற்சான்றிதழ் வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்தல் வேண்டும். ஏதாவது வகையில் ஆதரவு திரட்டுதல் தகைமை நீக்கமாகக் கொள்ளப்படும்.

23. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களின் நிராகரிப்பு பற்றிய கடிதத் தொடர்பு அல்லது விசாரணைகள் வரவேற்கப்பட மாட்டாது.

கோத்தாபய ராஜபக்ஷ
ஆர்டபிள்யுபீ, ஆர்எஸ்பீ, பிஎஸ்சி
பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி
அமைச்சின் செயலாளர்
மற்றும்
முகாமைத்துவ சபையின் தலைவர்,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்லைக்கழகம்.

8-797

---

## இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு "ஆ" மற்றும் வகுப்பு II பிரிவு "அ" வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2014

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்பிற்கு இணங்க மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுமென்பதுடன் இப்பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அத்தகைய விதிமுறைகள் அவர்களினால் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனை ஒன்றுக்கு அவர்கள் உட்படல் வேண்டும்.

(ii) பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல் களும் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

3. இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கு அமைய பரீட்சார்த்திகள் தத்தம் விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அதன்படி அரசாங்க சேவையிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவை அலுவலர்களாயின் தமது திணைக்கள தலைவர்கள் ஊடாகவும் மாகாண அரச சேவையிலுள்ள இலங்கை தொழில்நுட்பவியல் சேவை அலுவலர்களாயின் அவர்கள்

சேவையாற்றும் மாகாண சபையின் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஊடாகவும் 2014 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு தமது விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியின் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4. **அடையாள அட்டைகள்.**- பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்றை பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணங்களில் ஒன்றையேனும் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்தி உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

5. **விண்ணப்பப்படிவம்.**- (i) A4 அளவிலான ஒரு தாளில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 7 வரையிலான பந்திகளை முதலாம் பக்கத்திலும் ஏனையவற்றை மறுபக்கத்திலும் உள்ளடக்குதல் வேண்டும். விண்ணப்பங்களை தட்டச்சுசெய்து தயாரித்துக்கொள்ள முடியுமாயினும் அவை பரீட்சார்த்திகளின் கையெழுத்திலேயே சரியாகவும் தெளிவாகவும் நிரப்பப்படுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் தாம் இப்பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பத்தை நிரப்புதல் வேண்டும்.

(ii) விண்ணப்பத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை, சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங் களும், தகவல்கள் முழுமையாக குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சார்த்தி தான் நிரப்பிய விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கு இணங்கிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை பரீட்சார்த்தி சோதித்தறிதல் வேண்டும். அத்துடன், அவ்விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

(iii) முதல் முறையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆயினும் அதற்கு அடுத்த தடவைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் 400 ரூபாவும், ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுவதாயின் 200 ரூபாவும் பரீட்சைக் கட்டணமாக செலுத்த வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவுவைக்கும்படி நாட்டின் ஏதாவதொரு பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகம் ஒன்றில் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். இப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை பரீட்சார்த்தி தன்னிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீள செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்காக செலுத்தப் படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு ஊடகத்தினைத் தெரிவுசெய்தல் வேண்டும் என்பதுடன் அவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட ஒரே மொழியிலேயே வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும். அவர்கள் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப் படமாட்டாது.

(v) ஓர் அலுவலர் வினைத்திறன் காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே தடவையில் தோற்ற முடியாது.

(vi) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு II "ஆ" பிரிவில் உள்ள அலுவலர்கள் வகுப்பு II "ஆ" பிரிவிற்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

(vii) சேவையின் II "அ" பிரிவிலுள்ள அலுவலர்களும், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் ஐந்து வருடகால சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள முதலாம் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திய வகுப்பு II பிரிவு "ஆ" வின் அலுவலர்களும் வகுப்பு II பிரிவு "அ" வின் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

6. விண்ணப்பங்கள் அனுப்பியுள்ள சகல அலுவலர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசிப் பிரதியுடன் அனுமதி அட்டை அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் தமது கையொப்பத்தை உரியவாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையினைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சார்த்தி களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். பரீட்சைத் திணைக்களத்தினைத் தொடர்புகொள்ளும் வேளையில் பின்வருவனவற்றைத் தங்கள் கைவசம் வைத்துக்கொள்வது பயனுடையதாகும். அதாவது, தங்கள் கைவசமுள்ள விண்ணப்பப் படிவம், பற்றுச்சீட்டு ஆகியவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளியேயுள்ள பரீட்சார்த்தி யாயின், அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கம் மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய விபரங்களுடன் கோரிக்கைக் கடிதம் ஒன்று பரீட்சைத் திணைக்களத்திற்கு தொலைநகல் ஒன்றுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. மேற்படி (6) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடு களைப் பூர்த்திசெய்யத் தவறும் பரீட்சார்த்திகளினால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

8. அலுவலர்கள் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாகவும் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளிலும் தோற்ற முடியும். எனினும் சித்திபெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத் திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

9. **பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல்**.- இலக்கம் 03 இன்கீழ் மாகாண அரச சேவை அலுவலர்களின் பெறுபேறுகள் உரிய மாகாண அரசசேவை ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும், அரசாங்க சேவை அலுவலர்களின் பெறுபேறுகளை பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **பரீட்சைத் திட்டம்**.- (1) வகுப்பு II பிரிவு "ஆ" ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் :

(1) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 01) — 100 புள்ளிகள்
(2) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 02) — 100 புள்ளிகள்

*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல.01) - பாடத்திட்டம்*

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

| | |
|---|---|
| அத்தியாயம் II | சேவைக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நியமனம் |
| அத்தியாயம் III | இடமாற்றங்கள் |
| அத்தியாயம் IV | மாதச் சம்பளம், தற்காலிக நிலை, நிரந்தரம் மற்றும் ஓய்வூதியங்களுக்கான உரித்துடைமை வழங்குதல் |
| அத்தியாயம் V | விடுவிப்பு, முன்னர் வகித்த பதவிக்கு மீள சேவைக்கு அமர்த்துகை, சேவை முடிவுறுத்தல் |
| அத்தியாயம் VIII | மேலதிக நேரப்படிகள், விடுமுறை நாட்களும், விடுமுறை நாட்களுக்கான சம்பளங்களும் படிகளும் |
| அத்தியாயம் XII | விடுமுறை |
| அத்தியாயம் XIII | புகையிரத ஆணைச்சீட்டுக்கள் |
| அத்தியாயம் XIV | தீவுக்குள் கடமை நிமித்தமான பிரயாணங்கள் |
| அத்தியாயம் XIX | அரசாங்க வாசஸ்தலங்கள் |
| அத்தியாயம் XLVII | பொது நடத்தையும் ஒழுக்கமும் |

*நிதி ஒழுங்குவிதிகள் (பாட இல. 02) - பாடத்திட்டம்*

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் :

(1) அத்தியாயம் I.- செலவின மற்றும் வருமான மதிப்பீடுகள், திரட்டு நிதி மற்றும் செலவுகளைத் திட்டமிடுதல், நிகழ்ச்சித் திட்டம் தயாரித்தல், வருடாந்த செலவு மதிப்பீடுகளைச் சமர்ப்பிக்கும் படிவம் புதிய பிரேரணைகள் செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு, செலவு மதிப்பீடுகளில் மாற்றங்கள் செய்தல் (நி. ஒ. 1-68 வரை)

(2) அத்தியாயம் III.- நிதி முகாமையும் வகைகூறலும், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள், கணக்கீட்டு அலுவலர்கள், அரசிறை கணக்கு அலுவலர்கள் கொடுப்பனவுக்காக அதிகாரமளித்தல், அங்கீகாரம் வழங்குதல், உறுதிப்படுத்தல் பணிகளை ஒப்படைத்தல் (நி. ஒ. 124-147 வரை)

(2) வகுப்பு II பிரிவு "அ" வைச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பின்வரும் 2 வினாத்தாள்களைக் கொண்டதாக இருக்கும் :

(அ) அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (காலம் : 2 மணித்தியாலம்) (பாட இல. 03) — 100 புள்ளிகள்

(ஆ) நிதி ஒழுங்குவிதிகள் (காலம் : 2 மணித்தியாலயம்) (பாட இல. 04) — 100 புள்ளிகள்

*அலுவலக நிர்வாகமும் தாபன விதிக்கோவையும் (பாட இல. 03) - பாடத்திட்டம்*

இவ்வினாத்தாள் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் பட்டிருக்கும் :

| | |
|---|---|
| அத்தியாயம் XV | கல்வி, பயிற்சி அல்லது கடமை நிமித்தம் மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணங்கள் |
| அத்தியாயம் XVI | விடுமுறை பிரயாணங்கள் |
| அத்தியாயம் XXIII | குறிப்பிட்ட வகை நோய்களால் பீடிக்கப்பட்டிருக்கும் அரசாங்க அலுவலர்கள் சம்பந்தமான விசேட சலுகைகளும் அதுபற்றிய நிபந்தனைகளும் |
| அத்தியாயம் XXIV | சம்பளக் கடன்களும் முற்பணங் களும் |
| அத்தியாயம் XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக் கான சலுகைகள் |
| அத்தியாயம் XXVII | கடிதத் தொடர்பு வழிமுறைகள் |
| அத்தியாயம் XXVIII | நிர்வாக நடைமுறைகளும் நியதி களும் |
| அத்தியாயம் XXX | அரச அலுவலர்கள் மீதான அரசாங்கத்தின் அதிகாரங்கள் |
| அத்தியாயம் XXXIII | சட்ட ஆலோசனையும் சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் XLVII | பொதுவான நடத்தைகளும் ஒழுக்கமும் |
| அத்தியாயம் XLVIII | ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான விதிமுறைகள் |

அலுவலர்களின் செயலாற்றுகை, மதிப்பீடுகள் பற்றிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையதாகும்.

*நிதி ஒழுங்குவிதிகள் : பாட இலக்கம் 04 - பாடத்திட்டம்*

இவ்வினாத்தாள் நிதி ஒழுங்குவிதிகளின் பின்வரும் அத்தியாயங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் :

(1) அத்தியாயம் VI.- அரசாங்க நிதி முதலியவற்றிற்கான பொறுப்பு, முற்பணக் கணக்குகளும் வங்கிக் கணக்குகளும், உப படிவப் புத்தகங்கள், நிதி, முத்திரைகள் போன்றவை தொடர்பான தொகை மதிப்பீட்டுச் சபைகள், முற்பணங்கள், வங்கிக் கணக்குகள் (நி. ஒ. 315-396 வரை)

(2) அத்தியாயம் XIII.- வழங்கல்கள், வேலைகள் மற்றும் சேவைகள் : பெறுகைகள் மற்றும் ஒப்பந்தங்கள், வழங்கல்கள், பொருட்களின் பொறுப்பு மற்றும் சரிபிழை பார்த்தல், மேலதிக பொருட்கள் மற்றும் பயன்படுத்த முடியாத பொருட்கள் (நி. ஓ. 685 முதல் 775 வரை)

11. இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத யாதேனும் விடயங்கள் இருப்பின், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

12. பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனக் கருதப்படக்கூடாது.

13. இவ்வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில வாசகங்களுக்கு இடையில் யாதாயினும் உடன்பாடின்மைகள் காணப்படுமிடத்து சிங்கள மொழியிலான வாசகமே செல்லுபடியானதாக அமையும்.

பீ. பீ. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, ஓகத்து 8.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் வகுப்பு II பிரிவு 'ஆ' மற்றும் வகுப்பு II பிரிவு 'அ' வில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2014**

**(Efficiency Bar Examination Prescribed for Officers in Segment "B" and Segment "A" of Class II of the Sri Lanka Technological Service - 2014**

(பிரிவு 'ஆ' மற்றும் 'அ' இற்காக ஒரே முறையில் விண்ணப்பிக்க முடியாது)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம்-2
தமிழ்-3
ஆங்கிலம்-4 [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

விண்ணப்பிக்கும் பரீட்சை :
II "ஆ" - 0
II "அ" - 1 [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :———.
(முதலெழுத்துக்களை இறுதியில் எழுதவும்)

(ஆங்கில பெரிய எழுத்தில்) :———.
உதா. : (GUNAWARDHANA, M. G. B. S. K.)

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :———.

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ———.

2. (ஈ) அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ———.
(சிங்களத்தில்/தமிழில்) :———.
(பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் இம்முகவரிக்கு அனுப்பப்படும்.)

3. பால்: (ஆண்-0, பெண்-1) [ ]
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் எழுதவும்)

4. தொலைபேசி இலக்கம் : [ | | | | | | | | | ]

5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
[ | | | | | | | | | ]

6. தோற்றும் பாடம்/பாடங்கள் :
(வகுப்பு II "ஆ" பிரிவின்/வகுப்பு II "அ" பிரிவின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்காக தோற்றும் பாடங்கள் (ஏற்புடையதாகாத சொற்களைக் கீறிவிடவும்)

| பாடம் | பாட இலக்கம் |
|---|---|
| ——— | [ ] |
| ——— | [ ] |

7. நீங்கள் மாகாண அரச சேவையைச் சார்ந்தவரா ? அல்லது அரச சேவையைச் சார்ந்தவரா ? [ ]

(பொருத்தமான இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக.)

(அரசாங்க சேவை – 10, மேல் மாகாண அரச சேவை - 1, மத்திய மாகாண அரச சேவை - 2, தென் மாகாண அரச சேவை - 3, வட மாகாண அரச சேவை - 4, கிழக்கு மாகாண அரச சேவை - 5, வடமேல் மாகாண அரச சேவை - 6, வடமத்திய மாகாண அரச சேவை - 7, ஊவா மாகாண அரச சேவை - 8, சப்பிரகமுவ மாகாண அரச சேவை - 9)

8. (i) பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

(ii) 2014.09.22 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

9. (i) பதவிப் பெயர் :———.

(ii) இலங்கை தொழில்நுட்ப சேவையின் வகுப்பும் தரமும் ................ (II "அ"/I "ஆ" என்ற வகையில் உள்ளடக்க வேண்டும்.) :———.

(iii) 2014.09.22 ஆந் திகதிக்கு அத் தரத்தின் சேவைக்காலம் : ———.

10. நீங்கள் சார்ந்துள்ள திணைக்களம் :———.

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டிவிடவும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்) |
|---|

மேற்குறிப்பிட்ட விபரங்கள் சரியானவை எனவும் மேலே குறிப்பிட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரித்துடையவன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சையை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் பிரகடனப் படுத்துகின்றேன்.

———,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :———.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக் களத்தில் அவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்றுள்ள அலுவலர் அல்லது தமது பிரதேச தலைவர் முன்னிலையில் விண்ணப்ப தாரர் தனது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலரும் நான் தனிப்பட்ட முறையில் அறிந்தவருமான திரு./திருமதி/செல்வி ......................... ........................... என்பவர் ................. ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப் பட்டுள்ளதென்றும் அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

———,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

மேலே இல. 1 முதல் 10 வரையான பந்திகளில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சரியானவை என்றும் இப்பரீட்சார்த்தி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும் அவரால் தரப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியுடையவர் என்றும் சான்றுபடுத்துகிறேன்.

———,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :———.

8-820

## மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சைக்காக தகைமையுள்ள பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 இவ்வறிவித்தலில் ''சேவை'' என்னும் பதம் இணைந்த சேவையின் மொழிபெயர்ப்பாளர் சேவையையும் குறிக்கும்.

1.2 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் திசெம்பர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் அதிகாரம் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு உண்டு. பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறுபவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாக நேரிடும். பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும், நியமனம் நடைமுறைப்படும் திகதியும் நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும். பதவி வெற்றிடங் களில் எவற்றையேனும் அல்லது எல்லாவற்றையும் நிரப்பாது இருக்கும் அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு. தேசிய அவசியத்தின் பொருட்டு அந்தந்த மொழி மூலங்களில் நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை நியமன அதிகாரியால் தீர்மானிக்கப்படும்.

**2. ஆட்சேர்க்கப்படும் மொழிமூலங்கள் பின்வருமாறு** :

(1) சிங்களம்/தமிழ் - தமிழ்/சிங்களம்
(2) சிங்களம்/ஆங்கிலம் - ஆங்கிலம்/சிங்களம்
(3) தமிழ்/ஆங்கிலம் - ஆங்கிலம்/தமிழ்

**3. அமைப்பும் வேதன அளவுத்திட்டமும்**.- 2007.08.24 ஆந் திகதிய 6/2006(iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மொழிபெயர்ப்பாளர்கள் சேவையில் வகுப்பு I இன் சம்பளக் குறியீட்டு இலக்கம் MN6-2006A ஆவதுடன் மொழிபெயர்ப்பாளர்கள் சேவையில் வகுப்பு I சம்பள அளவுத்திட்டம் ரூபா 21,245-10 x 365-15 x 450 ரூபா 31,645 ஆகும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 4 ஆம் சம்பள படிநிலையை அடைவதற்கு முன்னர் சித்தி அடைதல் வேண்டும்.

45 ஆவது வயது பூர்த்தியானதன் பேரில் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் விலக்களிக்கப்பட மாட்டாது. (2001.09.12 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 20/2001 இன்படி).

**4. சேவை நிபந்தனைகள்**.- அரசாங்க சேவை நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளின் பேரிலும் 1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்கள் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளின் பேரிலும், பிரமாணக் குறிப்பில் செய்யப்பெற்ற அல்லது இனிமேல் செய்யப்படவுள்ள எவையேனும் திருத்தங்களுக்கு அமைய தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தியொருவர் மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு I இற்கு நியமிக்கப்படுவர்.

5. தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் கடமையை ஏற்றுக் கொள்வதற்கு முன் அரசாங்க வைத்தியர் ஒருவரைக் கொண்டு

மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ளுதல் வேண்டும். பரீட்சார்த்தி இத்தீவின் எப்பகுதியிலாயினும் பணியாற்றக்கூடிய உடல் நலம் அற்றவரென சிபாரிசு செய்யப்படுமாயின் இந்நியமனம் வலுப்பெறாது.

*6.* ***தகைமைகள்***.- (i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதையொத்த பரீட்சையொன்றில் முதலாம் மொழிக்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது அதையொத்த பரீட்சையொன்றில் இரண்டாம் மொழிக்கு திறமைச் சித்தியொன்றைப் பெற்றிருத்தல் அல்லது இரண்டாம் மொழி தொடர்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய அதைவிட உயர் தகைமையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(iii) (அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் ; அல்லது

(ஆ) சட்டத்தரணிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ; அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரியொன்றில் அல்லது பல்துறைத் தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வர்த்தகவியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் ; அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவம் தொடர்பான தேசிய டிப்ளோமா உயர் சான்றிதழைப் பெற்றிருத்தல் ; அல்லது

(உ) மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

***குறிப்பு 1***.- மேற்படி பட்டங்கள் அல்லது சான்றிதழ்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னரான திகதியிலிருந்து செல்லுபடியாகுதல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அமையும் மாதத்திற்கு உடன் முன்னரான மாதத்தில் இறுதித் திகதியாகும் திகதிக்கு அதாவது, 2014.08.31 ஆந் திகதிக்கு 21 வயதை அடைந்துள்ளதும் 40 ஐ அடையாதவருமானவருக்கு (அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்படி வயதெல்லை ஏற்புடையதாகாது.) திறந்த போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதியுண்டு.

***குறிப்பு 2***.- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிப் பாடங்களில் 2 ஐ பல்கலைக்கழகப் பட்டம் பெறும்போது சித்தியடைந்திருக்குமிடத்து அத்தகைய தகைமையுடைய ஒருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஏற்புடைய சம்பள அளவுத் திட்டத்தில் தொடக்க சம்பளத்தைப் பார்க்க இரண்டு சம்பள படிநிலையில் கூட்டிவைக்கப்படுவார்.

*7.* ***பரீட்சைக் கட்டணம்***.- பரீட்சைக்கான கட்டணம் 500 ரூபா ஆகும். இக்கட்டணம் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக எந்தவொரு மாவட்ட/பிரதேச செயலகமொன்றுக்கு செலுத்தப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இலக்கம் 2003:02:13 என்பதில் வரவு வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டப்படுதல் வேண்டும். இக்கட்டணம் மீளச்செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தாம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

*8.* ***விண்ணப்பிக்கும் முறை*** :

(அ) விண்ணப்பதாரர் A4 அளவினதாய் ஒரு முழுத்தாளில் இரு பக்கங்களையும் உபயோகித்து இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைய தயாரித்த விண்ணப்பத்தைத் தானே நிரப்ப வேண்டும். 1 முதல் 7 வரை விண்ணப்பப்படிவத்தின் முதலாம் பக்கத்திலும் 8 முதல் 11 வரை அதன் மறுபக்கத்திலும் 12 மற்றும் 13 வரை மூன்றாம் பக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கவனிக்கவும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் அவசியமாகும்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகின்றாரோ அம்மொழியில் விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படையில் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது 2,40,360 ரூபாவுக்கு மேலான வருடாந்த வேதனத்தையுடைய அரசாங்கத்தின் நிரந்தரப் பதவியைக் கொண்ட உத்தியோகத்தரொருவரினால் சான்றுப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) இப்பரீட்சைக்காகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரியடப்பட்டு 2014, செத்தெம்பர் 22 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் அவரைச் சென்றடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். அதன் பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(உ) தற்போது அரச திணைக்களங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். எவரேனுமொரு விண்ணப்பதாரர் அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறுமிடத்து அவர் தகுதியற்றவரெனக் கருதப்படுவார். 2014, செத்தெம்பர் 22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக தமது விண்ணப்பங்களைக் காலதாமதமின்றி திணைக்களத் தலைவர்களிடம் கையளிக்குமாறு விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுகிறார்கள்.

(ஊ) எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப்படாத எந்த விண்ணப்பமும் அறிவிக்கப்படாது நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டது, தாமதிக்கப்பட்டுவிட்டது என்ற முறைப்பாடுகள் எதுவும் கவனிக்கப்பட மாட்டாது.

(எ) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டதும் அது பற்றி செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். அவ்வறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். பரீட்சையின் பெயர், விண்ணப்ப தாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றைக் குறிப்பிட்டு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு அறிவித்தல் வேண்டும். கொழும்புக்கு வெளியில் எனின் குறித்த விபரங்களுடன் அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்கான தொலைநகல் (ஃபக்ஸ்) இலக்கத்தையும் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை தொலைநகல் மூலம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பப்படிவத்தினது படிமப் பிரதிகளையும் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் அறிவிப்பது மிகவும் பயனுள்ள தாக அமையும்.

9. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) இதில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிப்பார்கள் என்ற கருதுகோளின்படி, விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுமதிப் பத்திரங்களை வழங்குவார். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி பரீட்சை நிலையத்தின் மேற்பார்வையாளருக்கு அனுமதிப்பத்திரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். தனது அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் பரீட்சைக்குத் தோற்றும் மண்டபத்துக்குச் செல்லும் முதல் நாளிலேயே அந்த மண்டபத்துக்குரிய அனுமதி அட்டையை அம்மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகளின் தொகுதியொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்குவதை அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எல்லாத் தகுதிகளையும் உடையவர் என்பதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சாதகமாகக் கொள்ளவியலாது.

10. **பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்**.- பரீட்சார்த்தி தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பிலும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். இதன் பொருட்டு பின்வரும் சாதனங்களில் யாதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு.

11. **பொய்யான தகவல்களுக்கு தண்டனை**.- பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் பரீட்சார்த்த உரிமை இப்பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது அதற்குப் பின்னரோ எக்கட்டத்திலும் நிராகரிக்கப்படலாம். ஒரு பரீட்சார்த்தி அளித்த விபரங்களில் எவையேனும் அவரின் அறிவுக்கு எட்டியளவில் பொய்யானவை எனக் காணப்படின் அல்லது அவர் உண்மை எதனையும் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவார்.

12. **பரீட்சை முறை**.- இப் பரீட்சையானது எழுத்து மூலப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்கை ஆகிய இரு பகுதிகளாக நடாத்தப்படும்.

12.1 எழுத்து மூலப் பரீட்சை.- இதற்கான வினாத்தாள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(அ) மொழிபெயர்ப்பு- 100 புள்ளிகள் - 3 மணித்தியால வினாத்தாள்.
(ஆ) ஆங்கில மொழி- 100 புள்ளிகள் - 1 1/2 மணித்தியால வினாத்தாள்.
(இ) சிங்கள மொழி- 100 புள்ளிகள் - 1 1/2 மணித்தியால வினாத்தாள்.
(ஈ) தமிழ் மொழி- 100 புள்ளிகள் - 1 1/2 மணித்தியால வினாத்தாள்.
(உ) கிரகித்தல் - 100 புள்ளிகள் - 1 1/2 மணித்தியால வினாத்தாள்.

12.1.1 பாடத்திட்டம் :

(1) மொழிபெயர்ப்பு- அலுவலக ஆவணம் அல்லது அறிக்கை அல்லது செய்திப் பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை ஒன்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் உட்பட உத்தியோக பூர்வமான விஞ்ஞான, சட்டத்துறை சார்ந்த தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் இலக்கிய நூல்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட பகுதிகள் கீழ்வரும் முறைகள் அதாவது (i) அல்லது (ii) அல்லது (iii) ஆகிய ஏதேனும் ஒன்றிற்கு இணங்க மொழிபெயர்த்தல்.

(i) சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் தமிழ் மொழியிலிருந்து சிங்களத்துக்கும்
(ii) சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்திற்கும்
(iii) தமிழ் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் ஆங்கில மொழியிலிருந்து தமிழுக்கும் (மொழிபெயர்க்கும் போது உயர் திறமை எதிர்பார்க்கப்படுகின்றன.)

**குறிப்பு**.- ஆங்கில/சிங்கள/தமிழ் மொழி வினாத் தாள்கள் - இதன் பொருட்டு மும்மொழிகளிலும் வினாத்தாள்கள் தயார் செய்யப்படுவதுடன் அவற்றில் தனக்குரித்தான இரண்டு மொழி வினாத்தாள்களுக்கு பரீட்சார்த்திகள் தோற்ற வேண்டும்.

(2) *ஆங்கில மொழி*- ஒரு கட்டுரை, ஒரு பகுதியை சுருக்கியெழுதும் படியும் , சொற்களின் கருத்து விளங்குமாறு அவற்றை வாக்கியங்களில் அமைத்தல், மரபுச் சொற்றொடர்களை விளக்குதல், கூட்டு வாக்கியங்களையும், இணைந்த வாக்கியங்களையும் பிரித்து வாசகங்கள் ஆக்குதல்.

(3) *சிங்கள மொழி*- ஒரு கட்டுரை எழுதும் படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும் படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்துத் தெளிவாகும் வகையில் அச்சொற்களை கொண்டு வாக்கியங்கள் அமைக்கும்படியும், வாக்கியங்களில் உள்ள இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும், மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளங்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(4) *தமிழ் மொழி*- ஒரு கட்டுரை எழுதும்படியும், ஒரு பகுதியைச் சுருக்கி எழுதும்படியும், கொடுக்கப்பட்ட ஒரு பகுதியை சுருக்கி அவரது சொந்த மொழிநடையில் எழுதும்படியும், சொற்களின் கருத்து தெளிவாகும் வகையில் அச் சொற்களைக் கொண்டு வாக்கயங்களை அமைக்கும்படியும், இலக்கணப் பிழைகளைத் திருத்தும்படியும் மரபுச் சொற்றொடர்களின் கருத்தை விளக்கும்படியும் பரீட்சார்த்தி கேட்கப்படுவார்.

(5) *கிரகித்தல்*- சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் தயார் செய்யப்படும் கிரகித்தல் வினாப்பத்திரத்தின் பொருட்டு தாம் விரும்பும் ஒரு மொழியில் விடையளிக்க பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படும்.

அதன் பொருட்டு பகுதிகளின் தொகுப்பொன்று பரீட்சார்த்திக்கு கொடுக்கப்படும். சில பகுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் பரீட்சார்த்திக்கு மாற்றுக் கூற்றுக்களின் தொகுதியொன்று கொடுக்கப்படும். இவற்றுள் ஒன்று பகுதியின் உள்ளடக் கத்துடன் நன்கு பொருந்துவதாக இருக்கும். பொருத்தமான கூற்றைத் தேர்ந்தெடுக்கும்படி பரீட்சார்த்தி கேட்கப்படுவார். ஏனைய பகுதிகளைப் பற்றிய வகையில் பரீட்சார்த்தி பகுதியின் அர்த்தத்தை எவ்வளவு தூரம் விளங்கிக்கொள்கின்றார் என்பதை பரீட்சிப்பதற்கு ஏற்ப வினாக்கள் தயாரிக்கப்படும்.

**குறிப்பு**.- தெளிவற்ற கையெழுத்துக்களும் சொற்பிழை களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத எழுத்துக்களை எழுதும் பரீட்சார்த்தியொருவரின் தகைமை இரத்துச் செய்யப்படும்.

12.1.2 ஒவ்வொரு வினாத்தாள்களுக்கும் குறைந்த பட்சம் 40 % புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளுக்கிடையில் குறித்த புள்ளிகளின் திறமை ஒழுங்கின் பேரில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

12.2 *நேர்முகப் பரீட்சை*.- தகைமைச் சான்றிதழ்களையும் தேகாரோக்கிய நிலையையும் பரிசோதிப்பதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அதன் பொருட்டு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

13. பரீட்சார்த்திகள் அனைவரும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு முன்பாக வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். உரிய குறியீடுகளை சரியாகக் குறிக்கப்பட வேண்டும் என்பதுடன் தவறுதல்களையும் பிழைகளையும் திருத்துவதற்குச் செய்யப்படும் வேண்டுதல்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்திய பற்றுச் சீட்டினதும் நிழற் படப் பிரிதிகளை தம் வசம் வைத்துக் கொள்ளுதல் பயனுள்ளதாக இருக்கும்.

13.1 *பரீட்சைப் பெறுபேறு*.- வர்த்தமானிப்பத்திரிகையின் பந்தி 12.1.2 இன்படி சித்திபெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் திறமை ஒழுங்கு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுப் பிரதி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்கு தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட பெறுபேறு அனுப்பி வைத்தல் அல்லது WWW.results.exams. gov.lk இணையத்தளத்தில் வெளியிட இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

14. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி வசனங்களுக்கிடையில் ஏதேனும் வேறுபாடுகள் காணப்படுமாயின் சிங்கள மொழி அறிவித்தலை சரியானதாகக் கருத வேண்டும். இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவை தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கான பொது ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகக் கடமைப்பட்டுள்ளனர்.

கே. வீ. பி. எம். ஜே. கமகே,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2014, ஆகஸ்ட் 08 .

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மொழிபெயர்ப்புச் சேவையின் வகுப்பு 1 இற்கு ஆட்சேர்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)**

**OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO CLASS I OF THE TRANSLATORS SERVICE - 2013 (2014)**

[ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1. நீர் பரீட்சைக்குத் தோற்றுவது மொழிபெயர்ப்பாளர் சேவையில் எந்தப் பதவிக்கு என்பதைப் பற்றி பின் குறிப்பிடவும்)

(i) சிங்களம்/தமிழ்- மொழிபெயர்ப்பாளர் - 01
(ii) சிங்களம்/ஆங்கிலம் - மொழிபெயர்ப்பாளர் - 02
(iii) தமிழ்- ஆங்கிலம்-மொழிபெயர்ப்பாளர் - 03 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்.-
சிங்களம்/தமிழ் - 1
சிங்களம் /ஆங்கிலம் - 2
தமிழ் /ஆங்கிலம் - 3 [ ]

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :
திரு/திருமதி/ செல்வி: ----.
உதா.- GUNAWARDHANA.M.G.B.S.K

(ii) முழுப் பெயர் :

(I) ஆங்கிலத்தில்: ----.
(II) சிங்களத்தில்/தமிழில்: ----.

(iii) அடையாள அட்டை இலக்கம்:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

4. (i) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
(ii) அனுமதி அட்டை அனுப்பவேண்டிய முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : ----.
(iii) அலுவலக முகவரி: ----.
(iv) தொலைபேசி இல.:

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. (i) பால்- பெண்-1 ஆண்- 0 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

(ii) நீர் இலங்கைப் பிரசையா ? :----.
(iii) இனத்தொகுதி :
சிங்களவர் - 1
இலங்கைத் தமிழர் - 2
இந்தியத் தமிழர் - 3
முஸ்லிம் - 4
ஏனையோர் - 5 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? என்பது:
திருமணமானவர்-1
திருமணமாகாதவர்- 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

7. (i) பிறந்த திகதி:

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) 2014.09.22 ஆந் திகதியன்று வயது:

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

8. வர்த்தமானி அறிவித்தலில் 6.0 ஆம் பந்தியின் பிரகாரம் இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீர் பெற்றுள்ள கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள்:

(அ) (i) பட்டத்தின் அல்லது தகுதிச் சான்றிதழின் பெயர் :----.
(ii) அச்சான்றிதழ் வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் : ----.
(iii) பட்டம் அல்லது மற்றைய சான்றிதழ்கள் வலுப்பெறும் திகதி :----.
(iv) பட்டத்தைச் சித்தியெய்திய ஏனைய மொழிகள் :----.
(v) பட்டத்தின்போது சித்தியெய்திய மொழிகள் :----.

(1) -------
(2) ------

(ஆ) (i) முதலாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க.பொ.த (சா. த.) பரீட்சை அல்லது அதையொத்த பரீட்சை :----.
ஆண்டு :----.

(ii) இரண்டாம் மொழியில் திறமைச் சித்தியெய்திய க.பொ.த. (சா. த.) பரீட்சை அல்லது அதையொத்த தகைமைகளைக் கொண்ட பரீட்சை :----.
ஆண்டு :----.

9. நீர் தற்போது அரசாங்க சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கின்றீரா என்பதைப் பற்றி :

ஆம்/இல்லை.

ஆம் எனின்,
பதவியின் பெயர் :----.
நியமிக்கப்பட்ட திகதி :----.
தற்போது சேவையாற்றும் நிறுவனம் :----.

10. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும் :

| |
|---|
| |

11. இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானவை எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................... ஆம் இலக்க ........................ ஆந் திகதிய பணப் பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது எனவும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக நடந்துகொள்ளவும், இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவர் எனக் காணப்படின் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த உரிமை ரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் தீர்மானத்துக்கு நான் உடன்படுகின்றேன்.

மேலும் இவ்விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் வர்த்தமானி அறிவித்தலை நன்கு வாசித்து அறிந்து கொண்டேன் என்றும், குறியீட்டு இலக்கங்கள் மற்றும் தரப்பட்ட விபரங்களில் தற்செயலாக பிழைகள் அல்லது மாற்றங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்குரிய விளைவுகளுக்கு நானே பொறுப்பாளி என்றும், அது சம்பந்தமாக மேன்முறையீடுகளை சமர்ப்பிக்கமாட்டேன் என்றும் உறுதி கூறுகின்றேன். (மேலும் பரீட்சை நடத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளரால் விதிக்கப்படும் சகல சட்டதிட்டங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.)

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

12. **பரீட்சார்த்தியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல்:**
* ........................................................................ வசிக்கும் ............................................. என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் ............. ஆம் மாதம் ...... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயரும் பதவியும் :----.
முகவரி :----.
(பதவி முத்திரை) :----.

**குறிப்பு** :

* தற்போது அரச சேவையில் உள்ளவர்களின் கையொப்பத்தை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவராலோ அல்லது அவருக்கு பதிலாக சேவையாற்றும் உத்தியோகத்தர் ஒருவராலோ சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

13. **திணைக்களத் தலைவரின் சான்றுரை** :

இப்பரீட்சார்த்தி இதன் 07, 08 மற்றும் 09 ஆம் பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும் அவரின் வேலையும் நடத்தையும் திருப்பதிகரமானதென்றும் வர்த்தமானப் பத்திரிகையின்படி அவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்கின்றார் என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன். தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :....................
பதவி :....................
முகவரி :....................
திகதி:....................

8-850

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.